# Tamil Murli Quiz 27-09-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**இன்று பாப்தாதா நாளா புறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் எந்த ஒரு எண்ணத்தைப் பார்த்தார்?**

- **A.** அன்பு மற்றும் நினைவின் எண்ணம்
- **B.** முதல் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம்
- **C.** சத்யுகத்தில் கிருஷ்ணருடைய குடும்பத்தில் அவர் கூடவே பிறக்க வேண்டும் என்ற எண்ணம்
- **D.** பாப்தாதாவின் மனதிற்குப் பிடித்த மானவர்களாக ஆக வேண்டும் என்ற எண்ணம்

**Q.2)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**சேவை செய்யும் குழந்தைகளின் எந்த மூன்று விஷேசங்களை இன்று பாப்தாதா பார்த்தார்?**

- **A.** அன்பு, நினைவு மற்றும் சேவை சொரூபம்
- **B.** அன்பு, கருணை மற்றும் உதவி செய்யும் சொரூபம்
- **C.** அன்பு, உதவி செய்வது மற்றும் சக்தி சொரூபம்
- **D.** அன்பு, வள்ளல் மற்றும் குஷியின் சொரூபம்

**Q.3)** <u>சரியா? தவறா?:</u>
**நீங்கள் மிக நல்லவர்கள், ஞானம் நன்றாக இருக்கிறது, வாழ்க்கை நன்றாக இருக்கிறது என்பது மட்டுமின்றி தந்தை அதைவிட நன்றாக இருக்கிறார் என்று உணர்வதைத்தான் தந்தையின் அன்பிற்குரியவர் ஆவது என்பதாகும் .**

- **A.** சரி
- **B.** தவறு

**Q.4)** <u>சரியான அனைத்து விடைகளையும் தேர்வு செய்யவும்:</u>
**இறுதி முடிவில் தந்தையின் கூடவே தர்மராஜரும் இருப்பார். அந்த இறுதி முடிவுக்காக இப்போது கிடைத்திருக்கும் ஒரே ஒரு கடைசி வாய்ப்பு என்ன என்று பாபா கூறுகிறார்?**

- **A.** கடந்த கால சம்ஸ்காரங்களை எரித்து விடுவது
- **B.** அமிர்த வேலையிலிருந்து இரவு வரை ஈஸ்வரிய நியமங்கள் மற்றும் மரியாதைகளை கடை பிடிக்க விரதம் எடுப்பது
- **C.** நிரந்தர புண்ணிய ஆத்மா ஆகி பிறருக்கு , மனதின் மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ அல்லது உறவு தொடர்பின் மூலமாகவோ உதவி செய்து கொண்டே இருப்பது
- **D.** மேலே கூறிய அனைத்தும்

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**தொடக்க காலத்தில் வந்தவர்களை விட பின்னால் வந்தவர்களுக்கு பரிட்சை தாள்களில் எவ்வளவு அதிகப்படியான மதிப்பெண்கள் கிடைக்கும் என்று பிரம்ம பாபா கூறினார்?**

- **A.** 50 %
- **B.** 25 %
- **C.** 10 %
- **D.** அதிகப்படியான மதிப்பெண்கள் கிடைக்காது

**Q.6)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் _____________ திறமை நிறைந்தவர்கள் என்று பாப்தாதா கூறினார்?**

- **A.** நிலத்தை தயார் செய்வதில்
- **B.** அன்புடன் பாலனை செய்வதில்
- **C.** சகயோகம் கொடுப்பதில்
- **D.** இருக்கையை பிடிப்பதில்

*Q.7)* <u>**சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:**</u>
**வெளிநாட்டு சேவையில் வெற்றி அடைவதற்கு விஷேசமாக ________________ பயனுள்ளதாக இருக்கும் என்று பாப்தாதா கூறினார்?**

**A.** உறவின் சக்தி
**B.** அமைதியின் சக்தி
**C.** பல வகையான துறையைச் சேர்ந்தவர்களின் தொடர்பின் சக்தி
**D.** ஞானத்தின் சக்தி

*Q.8)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**பாக்கியம் என்ற பொக்கிசத்தை அடைவதற்கான சாவி எது?**

**A.** விடா முயற்சி
**B.** நினைவு
**C.** ஞானம்
**D.** அன்பு

*Q.9)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**என்னுடையது என்ற உணர்வை அகற்றக்கூடிய பிரம்ம பாபாவிற்குச் சமமான _________________________ ஆகுக.**

**A.** விஷ்வ கல்யாணகாரி
**B.** உயர்ந்த தியாகி
**C.** தாமரை மலர் போன்ற தூய்மையானவர்
**D.** உயர்ந்த அன்னப்பறவை

*Q.10)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**சட்டென்று பிறருடைய குறைகளை கண்டு பிடிப்பது என்பது இதுவும் ______________ கொடுப்பது .**

**A.** துக்கம்
**B.** முன்னெச்சரிக்கை
**C.** சகயோகம்
**D.** பரிசு